## த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்தை உதயநிதி ஸ்டாலின் அம்பலப்படுத்தியதால் கைது:

# ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர் ஆணவம் அழிவை விரைவுபடுத்தும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஆக.5

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கைது என்பது ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர்ச்சியான ஆணவம், அழிவை விரைவுபடுத்தும் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

காவிரியில் தமிழ்நாட்டுக்கான உரிமையை நிலைநாட்ட துப்பு இல்லாத, மேகதாது அணையைத் தடுக்க முதுகெலும்பு இல்லாத த.வெ.க. அரசின் அலட்சிய ஆணவப் போக்கைக் கண்டித்து தஞ்சையில் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தின் எழுச்சி ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கொந்தளிப்பை உணர்த்துவதாக அமைந்திருந்தது.

**எதிர்க்கட்சித் தலைவரின் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள்!**

கழக உடன்பிறப்புகளோடு உழவர் பெருமக்களும் பொதுமக்களும் பங்கெடுத்து தங்களது உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்தை மிகக் கடுமையாக அம்பலப்படுத்தி விமர்சித்தார்.

“நிர்வாகத் திறனற்ற டம்மி முதலமைச்சரால் காவிரி நீரைக் கொண்டுவர முடியவுமில்லை, மேகதாது அணையைத் தடுக்க பேசவும் முடியவில்லை, விவசாயிகள் வேதனையில் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள், ஆனால் அமைச்சர்களோ முதலமைச்சர் நடித்த படத்தை பார்த்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள், ஜோக்கர் அமைச்சரவை தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது” என்று அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சித் தலைவர் வைத்தார். இதற்கு இதுவரை ஆட்சியாளர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

**பிரச்சினையை திசை திருப்ப உதயநிதியை கைது செய்துள்ளனர்!**

காவிரி பிரச்னையில் அரசின் தோல்வி வெளிச்சத்துக்கு வந்துவிட்டதை மறைக்கும் வகையில், பிரச்சினையையே திசை திருப்பும் வகையில் இன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி வீட்டுக்கு வந்த போலீஸ் படை அவரை அராஜகமாக கைது செய்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் என்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் அவரைக் கைது செய்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றுள்ளது த.வெ.க. அரசு. பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்திருப்பதன் மூலமாக உதயநிதியை மிரட்டப் பார்க்கிறார்கள்.

நாளை சட்டமன்றம் கூட இருக்கிறது. நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறார்கள். அப்போது கேபினெட் தகுதி பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவையில் இருக்க வேண்டும். ஆனால் இருக்கக் கூடாது என்று நினைத்து இந்த நடவடிக்கையைத் தொடங்கி இருக்கிறார்கள்.

**உச்சநீதிமன்றத்தின் உத்தரவு பாசிச அரசுக்கு விழுந்த அடி!**

நாடு முழுவதும் கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் காட்டிய எதிர்ப்புக்குப் பிறகு,



‘கைது செய்யும் எண்ணம் இல்லை, விசாரணை முடிந்ததும் விடுவித்துவிடுவோம்’ என்று நீதிமன்றத்தில் த.வெ.க. அரசு வழக்கறிஞர் சொல்லி இருக்கிறார். விசாரணை நடத்துவதுதான் நோக்கம் என்றால் சென்னையிலேயே வைத்து நடத்தி இருக்கலாமே? எதற்காக தஞ்சாவூர் அழைத்துச் செல்ல வேண்டும்? எதற்கு ஜாமீனில் விடுவிக்க முடியாத பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்? மக்கள் எதிர்ப்பால் பின் வாங்கியது தெரியாமல் பூசி மெழுகுகிறது அரசு. ‘உதயநிதியை இன்றே விடுதலை செய்ய வேண்டும்’ என்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கி இருக்கும் உத்தரவு, த.வெ.க.வின் பாசிசத் தன்மைக்கு விழுந்த அடி!

ஆட்சிக்கு வந்தது முதல் தன்னையும் தனது அமைச்சர்களையும், ஆட்சியையும் விமர்சிப்பவர்களைக் கைது செய்யும் ஒரே வேலையைத்தான் முதலமைச்சர் விஜய் பார்த்து வருகிறார். ட்வீட் போட்டால், வீடியோ பேசினால் கைது செய்து வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், மார்க்கண்டேயன் ஆகியோர் மீதும் கைது நடவடிக்கை பாய்ந்தது. நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்கள், இளைஞர்களைப் போராட விடவில்லை. போராட்டம் நடத்தியவர்கள் மீது அராஜகமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

**கைதை கட்சித் தலைவர்கள் கண்டித்ததற்கு நன்றி!**

சென்னை மெரினா கடற்கரையே பூட்டி வைக்கப்பட்டது பாசிசத்தின் உச்சம். விவசாயிகள் தன்னெழுச்சியாகப் போராடியதை எதிர்க்கட்சிகளின் தூண்டுதலின் பேரில் போரடியதாகச் சொல்லப்பட்டது. நீட் தேர்வு எதிர்ப்பு பரப்புரை செய்யச் சென்ற திராவிடர் கழக வாகனப் பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகத்தான் விவசாயிகளுக்காக ஆர்ப்பாட்டம் நடத்திய, அதில் பங்கெடுத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மீது கைது நடவடிக்கையைப் பாய்ச்சியது த.வெ.க. அரசு.

இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சில தலைவர்கள், உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் உதயநிதிக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது வருந்தத்தக்கது. உதயநிதி தனது உரையில் ஆபாசமாக ஏதும் பேசவில்லை. யாரையும் குறிப்பிடவில்லை. அவர் பேசாத ஒன்றை பேசியதாகச் சிலர் பரப்பியதைச் சரிபார்க்காமல் அரசியல் தலைவர்கள் சிலர் உதயநிதியைக் கண்டிப்பது பிரச்சினையை திசைதிருப்புவது ஆகும். உதயநிதி தவறுதலாகப் பேசுகிறவர் அல்ல. அப்படியே தவறுதலாகப் பேசினாலும், உடனடியாக மன்னிப்பு கேட்கும் இயல்புடையவர்.

**ரீல்ஸ் முதலமைச்சர் பொறுப்புடன் செயல்பட வேண்டும்!**

ஆட்சிக்கு வந்தது முதல் வாக்குறுதிகளை நிறைவேற்ற நினைக்காமல், ரீல்ஸ் கிரியேட்டராக மட்டுமே வலம் வரும் முதலமைச்சர் விஜய், தனது பொறுப்பை உணர்ந்து இனியாவது செயல்பட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்துள்ள கழக உடன்பிறப்புகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்!

ஆணவம், அழிவுக்கு வழிவகுக்கும்; தொடர்ச்சியான ஆணவம், அழிவை விரைவுபடுத்தும்!

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## பெண்களை தாயாக , தங்கையாக, அக்காவாகப் பார்ப்பவன் நான்: யாரையும் இழிவுபடுத்தும் எண்ணம் துளியும் எனக்குக் கிடையாது!

# விவசாயிகளுக்காக தி.மு.க. போராடியதை திசைதிருப்பவே கைது நாடகம்!

## ரீல்ஸ் அரசின் பொய் வழக்கு இது! திருச்சியில் — சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

திருச்சி, ஆக. 5–

**விவசாயிகளுக்காக தி.மு.க. போராடியதை திசைதிருப்பவே என்னை கைது செய்துள்ளனர் எனவும், பெண்களை நான் அக்காவாக, தாயாக, தங்கையாக பார்க்கிறேன் எனவும், யாரையும் இழிவுபடுத்தும் எண்ணம் எனக்கு இல்லை என்றும், காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதின்பின் திருச்சியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.**

**இதுகுறித்து அவர் கூறியதாவது:**

“தஞ்சாவூரில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், விவசாயிகளுக்கு ஆதரவாக ஒரு மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை, நேற்று நடத்திக் காட்டினோம். அதில் நானும் கலந்துகொண்டேன். என்னோடு சேர்ந்து, நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள், விவசாய சங்க நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள், நிறைய பேர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்கள். நானும் கிட்டத்தட்ட ஒரு 25 நிமிடங்கள் அதில் பேசினேன்.

**பொய் வாக்குறுதிகள்**

முழுக்க முழுக்க இந்த ஆட்சி அமைந்த பிறகு, விவசாயிகளுக்கு என்னென்ன விதமான துரோகங்களைச் செய்திருக்கிறார்கள். தேர்தல் வாக்குறுதி என்று பொய் வாக்குறுதிகளைச் சொல்லி, இந்த அரசு விவசாயிகளை எப்படி ஏமாற்றி இருக்கிறது. மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு மிகத் தீவிரமாக முயற்சி செய்துகொண்டு இருக்கிறது, அங்கே இருக்கக்கூடிய முதலமைச்சர், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, மேகதாது அணை கட்டுவோம் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறார், என்பது பற்றி விவரித்துப் பேசி கண்டனங்களைத் தெரிவித்தோம்.

தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து விட வேண்டிய தண்ணீரையும், தொடர்ந்து விடவில்லை. எங்களுடைய தலைவர் முதலமைச்சராக இருக்கும்போது, ஒவ்வொரு மாதமும் ஜீன் மாதம், 12ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து, தொடர்ச்சியாக, இன்னும் சொல்லப்போனால், சில ஆண்டுகள் ஜீன் 12 ஆம் தேதிக்கு முன்பாகவே எங்களுடைய தலைவர், விவசாயிகளுக்காகத் தண்ணீரைத் திறந்து விட்டிருக்கிறார்கள். ஆனால், ஐந்து வருடங்களுக்குப் பிறகு இந்த வருடம் ஜீன் மாதம் போய், ஜீலை மாதம் போய், இப்போது ஆகஸ்ட் மாதமும் வந்து விட்டது இதுவரைக்கும் தண்ணீர் திறக்கவில்லை.

**தைரியம் இல்லை, தெம்பு இல்லை**

அதற்கான வக்கில்லை இந்த அரசுக்கு. தண்ணீரைக் கேட்டுப் பெறுவதற்கும் வக்கில்லை. கர்நாடகாவை எதிர்த்துப் பேசுவதற்கு வக்கில்லை, தைரியம் இல்லை, தெம்பு இல்லை. எனவே, இந்த முதலமைச்சர் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும்.

சட்டசபையில் பேசும் போதும் சொன்னேன். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுங்கள். இது ஒரு தனிப்பட்ட கட்சியின் பிரச்சினை கிடையாது, இது நம் மாநிலத்தின் அனைத்து விவசாயிகளின் பிரச்சினை. நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து போராடுவோம், நம் ஒற்றுமையைக் காட்டுவோம் என்று தொடர்ந்து நான் சொன்னேன். அதற்கும் பதில் சொல்லவில்லை.

இவற்றையெல்லாம் நேற்று வலியுறுத்திப் பேசினேன். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு அமைச்சரும் இந்த மூன்று மாதக் காலங்களில் என்னென்ன செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று ஆதாரத்துடன் குறிப்பிட்டுப் பேசினேன். அதற்கெல்லாம் பதில் சொல்வதற்குத் தெம்பு இல்லாத, திராணி இல்லாத, வக்கில்லாத ஒரு முதலமைச்சர், ஒரு டம்மி முதலமைச்சர் நமக்கு வாய்த்திருக்கிறார்.



**திசை திருப்பும் உத்தி**

அதையெல்லாம் விட்டுவிட்டு, நான் பேசாத ஒரு விஷயத்தை கட், காப்பி, பேஸ்ட் செய்து, சில விஷயங்களைச் சேர்த்து ச் சொல்கிறார்கள். நான் யாரையும் தவறாகப் பேசவில்லை, முழுக்க முழுக்க விவசாயிகளுக்காகத்தான் பேசினேன்.

நேற்று பேசும்போதும் சொன்னேன், இந்த அரசு, குறிப்பாக இந்தக் கட்சி, இந்த தற்குறிக் கூட்டம், அவர்களின் கொள்கையே கவனத்தைத் திசை திருப்பும் உத்திதான் (Diversion Tactics). முழுக்க முழுக்கப் பொய் செய்தி (Fake News), கவனத் திருப்புதல். மாநிலத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை எழும் போது, அதைத் திசை திருப்புவதற்கு வேறு ஏதாவது ஒரு பிரச்சினையை எடுக்க வேண்டியது, முதலமைச்சர் ஒரு போட்டோ சூட் நடத்த வேண்டியது, தி.மு.கவின் திட்டங்களை அப்படியே சுற்றிப் பார்க்க வேண்டியது, போஸ் கொடுக்க வேண்டியது, ரீல்ஸ் போடுவது, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்கு சென்று, அங்கே இருக்கக்கூடிய மாணவர்களை எல்லாம் வரச் சொல்லி, அவர்கள் கட்சிப் பெயரைச் சொல்லி கோஷம் போடச் சொல்லி, அதை ரீல்ஸாகப் போடுவது இவற்றைத்தான் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அவர்களுடைய நிர்வாகிகளே இதுவரைக்கும் பல்வேறு குற்றங்களைச் சொல்லி இருக்கிறார்கள். பாலியல் குற்றங்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்கெல்லாம் இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு கவனத் திருப்பு உத்தியைப் பயன்படுத்துகிறார் இந்த முதலமைச்சர்.

அதுமாதிரி நேற்று நான் பேசிய பிறகு, அது விவசாயிகள் இடத்தில் மிகப்பெரிய ஒரு வரவேற்பைப் பெற்ற பிறகு, விவசாயிகள் இடத்தில் மிகப்பெரிய ஒரு எழுச்சியை ஏற்படுத்திய பிறகு, அதை எப்படியாவது திசைதிருப்ப வேண்டும், நாளைக்கு சட்டமன்றம் வேறு ஆரம்பிக்கும் போகிறது, சட்டமன்றத்தில் நிச்சயம் இந்தத் தலைப்பைப் பேசுவார்கள், எதிர்க்கட்சி இந்தப் பிரச்சினையை எழுப்பும் என்று தெரிந்து கொண்டு, அதை முடக்க வேண்டும் என்று, திசை திருப்பும் உத்தியாக இன்றைக்கு, காலையில் நான் பேசாத ஒரு விஷயத்தைப் பேசியதாக, கட், காபி, பேஸ்ட் செய்து, அதைத் தேசிய ஊடகங்கள் (National Media) வரைக்கும் கொடுத்துப் பரவ வைத்தனர்.

**நான் கலைஞரின் பேரன்**

காலையில் காவல்துறை என்னைக் கைது செய்யப் போவதாக வந்தார்கள்.

கைது செய்யப் போவதாகச் சொன்னார்கள், நானும் சரி, என்று முழு ஒத்துழைப்பைத் தருகிறேன் என்று சொல்லி அவர்களோடு சென்றேன்.

கைது செய்யப்படும்போதே, நான் பத்திரிகையாளர்கள் கேட்கும்போது சொன்னேன், இந்த கைதை எப்படிப் பார்க்கிறீர்கள்? என்று கேட்டதற்கு, நான் சொன்னேன் மிகவும் நகைச்சுவையாகப் பார்க்கிறேன் என்று.

நான் பேசாத ஒரு விஷயத்தைப் பேசியதாகக் கதை விட்டு, என்னைக் கைது செய்யப் பார்க்கிறார்கள், என்னை முடக்கப் பார்க்கிறார்கள், என்னை மிரட்டப் பார்க்கிறார்கள். இதற்கெல்லாம் பயப்படக் கூடிய ஆள் நான் கிடையாது. நான் கலைஞரின் பேரன், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் மகன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகளில் ஒருவன். நாங்கள் எதற்கும் பயப்பட மாட்டோம். நான் எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன், என்று சொன்னேன்.

அதே மாதிரி, நீதிமன்றத்திற்குச் சென்று, என்ன சொல்லியிருக்கிறார்கள் அரசு வழக்கறிஞர், அவரைக் கைது செய்கிற நோக்கமே எங்களுக்குக் கிடையாது, சும்மா விசாரணைக்கு அழைத்துக்கொண்டு போகிறோம் என்று சொல்லி, அரசு செலவில், மக்கள் வரிப்பணத்தில், கிட்டத்தட்ட 3,000 காவலர்கள் பாதுகாப்போடு, ஒரு பயங்கரவாதியை அழைத்துக் கொண்டு போவது மாதிரி, சென்னையிலிருந்து, சாலை வழியாக 400 கி.மீ தஞ்சாவூர் வரைக்கும் அழைத்துக்கொண்டு சென்றனர். எங்களை முறையாகவும் பார்த்துக் கொள்ளவில்லை. தஞ்சாவூர் அழைத்துக்கொண்டு செல்ல வேண்டும், ஆனால் தஞ்சாவூர் அழைத்துக்கொண்டு போகாமல், நடுவில் செங்கிப்பட்டி என்று ஒரு காவல் நிலையத்தில் இறக்கி, அங்கே விசாரணை என்ற பெயரில், பல கேள்விகளைக் கேட்டு, இன்றைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

**சட்டப்படி நாங்கள் சந்திப்போம்**

இதை நாங்கள் சட்டப்படியே நிச்சயமாக சந்திப்போம்.

நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புவது, நான் எந்தவிதமான ஒரு தவறான எண்ணத்திலும் நேற்று பேசவே இல்லை. யாரையும் புண்படுத்த வேண்டும், யாரையும் தாழ்த்திப் பேச வேண்டும், குறிப்பாகச் சொன்னால் பெண்களைத் தாழ்த்திப் பேச வேண்டும் என்று துளி கூட என்னுடைய மனதில் எண்ணம் கிடையாது.

என்னுடைய பெற்றோர், என்னுடைய குடும்பம் என்னை அப்படி வளர்க்கவில்லை. என் தாய் தந்தை என்னை அப்படி வளர்க்கவில்லை. எனக்குத் திருமணமாகி ஒரு மனைவி இருக்கிறார், அவர்களோடுதான் நான் வாழ்ந்துகொண்டு இருக்கிறேன். எனக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறார், எனக்கு ஒரு தங்கை இருக்கிறார். எனக்கென்று ஒரு குடும்பம் இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு தாய்மாரையும் என் குடும்பமாக, தாயாக, தங்கையாக நான் நினைத்துக்கொண்டு இருக்கிறேன்.

இப்படிப் பொய் வழக்குப் போட்டு என்னை பயமுறுத்தலாம் என்று இந்த அரசு நினைத்தார்கள். அதற்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் நான் கிடையாது. இந்த நேரத்தில் என் கைதைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் பல இடங்களில் மறியல் செய்து, ஆர்ப்பாட்டம் செய்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் என் மீது வைத்திருக்கக்கூடிய அந்த அன்பிற்கும் பாசத்திற்கும் இந்த நேரத்தில் நான் தலைவணங்குகிறேன். அவர்களை எல்லாம் விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்று நான் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

எங்களுடைய தலைவர், பொதுச்செயலாளர், முதன்மைச் செயலாளர், வழக்கறிஞர் அணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் என் கூடவே இருந்தார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள், அவர்களுக்கு நான் என்ன பேசினேன் என்பது தெரியும். கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் நேற்று அந்தக் கூட்டத்தில் என்னுடன் பங்கேற்று அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். அவர்கள்தான் நான் பேசியதற்கு சாட்சி. அவர்களும் இந்த கைது முயற்சியை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

எனக்கு இருக்கக்கூடிய ஒரே வருத்தம், சில தலைவர்கள் நான் பேசியதை முழுமையாகக் கேட்காமலோ, பார்க்காமலோ, தீர ஆராயாமலோ நான் தவறாகப் பேசிவிட்டேன் என்று கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. நான் எந்த நேரத்திலும் அது மாதிரி தவறான எண்ணத்தில் பேசவே இல்லை. விவசாயிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக இந்த தரங்கெட்ட அரசு கைது செய்திருக்கிறது.

நான் மீண்டும் சொல்கிறேன், இந்த கைதுக்குப் பயப்பட மாட்டேன். இன்னும் 100 முறை பேசுவேன், மீண்டும் பேசுவேன். அதில் சில பேர் நான் இரட்டை அர்த்தத்தில் பேசிவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் நிச்சயமாக இரட்டை அர்த்தத்தில் எல்லாம் பேசவே இல்லை. நான் ஒரே அர்த்தத்தில்தான் பேசினேன். மீண்டும் பேசுவேன்.

கடந்த காலத்தில் எங்களுடைய தலைவர் எடுத்த முயற்சியினாலே, காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டு, விவசாயிகளுக்குத் தண்ணீர் வந்திருக்கிறது. இந்த முறை தண்ணீர் வரவில்லை. காவிரிக்குத் தண்ணீர் வர வேண்டும். இதைத்தான் நான் பேசினேன், இதை மீண்டும் மீண்டும் நான் பேசுவேன். எனவே, இந்த மாதிரி பொய் வழக்குகளுக்கெல்லாம் பயப்படப் போவதில்லை. இதைச் சட்டரீதியாகச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்.

**கேள்வி:** 100 நாளில் இருக்கிற இந்த ஆட்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** இதை நான் ஒரு ஆட்சியாகவே பார்க்கவில்லை. இதை ஒரு சர்க்கஸ் கூடாரம் மாதிரிதான் நான் பார்க்கிறேன்.

**கேள்வி:** உங்களை கைது செய்யக் காரணம் என்ன சார்?

**பதில்:** பயமுறுத்த வேண்டும். திசைதிருப்புதல்தான் (Diversion), வேறு ஒன்றும் கிடையாது.

**கேள்வி:** தொடர்ந்து தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களைக் கைது செய்கிறார்களே ஏன்?

**பதில்:** தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்தால் அவர்களைக் கைது செய்யத் தோன்றும், அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்தால் எப்படியாவது அவர்களுக்கு சோஃபா அனுப்பி வாங்க வேண்டும் என்று இந்த அரசு முயற்சிக்கிறது.

**கேள்வி:** பலரையும் தி.மு.கவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாகட்டும், எதிர்க்கட்சித் தலைவரையே கைது செய்யும் நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. வரக்கூடிய காலங்களில் அவர்களை எப்படி நீங்கள் அணுகப் போகிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள்?

**பதில்:** இந்த முதலமைச்சருக்கு தி.மு.கவின் வரலாறு தெரியவில்லை, தமிழ்நாட்டின் வரலாறு தெரியவில்லை. தெரியாமல் இதையெல்லாம் செய்துகொண்டு இருக்கிறார். மக்கள் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நிச்சயம் மக்கள் இதற்கான பதிலைத் தரவேண்டிய நேரத்தில் நிச்சயம் தருவார்கள்.

**கேள்வி:** சட்டமன்றக் கூட்டத் தொடரில் தி.மு.கவின் வியூகம் என்ன?

**பதில்:** நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், முக்கிய தலைவர்கள், மூத்த தலைவர்கள் அனைவரும், எங்களுடைய தலைவரைப் பார்க்க, தலைவரின் இல்லத்திற்குச் செல்கிறோம். தலைவர் எங்களுக்குத் தகுந்த அறிவுரையைக் கூறுவார். அதன்படி நாங்கள் நடந்துகொள்வோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பேட்டி அளித்தார்.